**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 31,044,679 தொகையான மொத்த கடன்பட்டோர் மீதியில் வெளிநாட்டு புலமைப்பரிசில் கடன்பட்டோர் தவிர ஏனைய கடன்பட்டோர் மீதியில் ரூபா 533,296 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்த கடன் மீதியில் ரூபா 498,326 தொகை | மேற்கூறப்பட்ட 06 புலமைப் பரிசில் கடன்பட்டோர்களில் 05 பேர்களின் தற்போதைய முகவரியை கண்டறிவதற்கு முடியாதிருந்தமையால் கடனை அறவிடும் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. மற்றைய கடன்பட்டோருக்காக வழக்கு தொடரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. வழக்கு சமரசத்திற்கு உட்படாதிருந்த போதும் அந்த கடன்பட்டோரினால் | அறவிட வேண்டிய மீதிகள் தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அவ்வவ்போது நிறுவகத்தின் கணக்கிற்கு ரூபா 580,000 செலவு வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தில் 2002 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற 06 வெளிநாட்டு புலமைப்பரிசில் கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 12,859,881 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அந்த 05 கடன்பட்டோரிடமிருந்து எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை அறவிடுவதற்கு மீள் நினைவூட்டல் உரிய ஊழியர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த போதும் அதற்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 யூன் 06 ஆந் திகதி சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக நிறுவகத்தின் ஊழியர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அழைக்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் அடிப்படையில் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனைகளை மேற்கொண்டு பணம் அறவிடப்படல் வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 19,681,654 கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 643,706 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்த்து வைக்கப்படாத மீதியாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பணிக்கொடை பணம் செலுத்தப்படாதிருந்தமை, அறிவிக்கப்பட்ட போதும் பணத்திற்கு உரித்து கோரப்படாமை, ஒப்பந்தகாரர்கள் நிறுத்தி வைத்தல் கட்டணம் கோராமை, காலாவதியாகியதன் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமை, கேள்வி மற்றும் பிணை வைப்புக்களை விடுவிப்பதற்கு முடியாமை, சாரதிகளிடமிருந்து அறவிடப்பட்ட பின்னர் அமைச்சிற்கு செலுத்த வேண்டியிருந்தமை, உணவு பாதுகாப்பு தொடர்பாக தேவையான | தாமதமின்றி பணத்தை மீள செலுத்துவதற்கோ அல்லது உரித்து கோரப்படவில்லை யாயின் வருமானத்திற்கோ செலவு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மதிப்பீட்டு ஆய்வுக்குட்பட்ட பணம் தொடர்பாக கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமை என்பவற்றின் காரணமாக உரிய பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 211 | 2019 - 2021 கால எல்லையில் மின்சாரப் பட்டியல் தாமதமாக தீர்த்து வைக்கப்பட்டமையால் ரூபா 25,929 மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய மின்சாரப் பட்டியல் செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டமைக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்காண்பதற்கும், அதற்குரிய விடயங்களை பரீட்சித்து பொறுப்புவாய்ந்த தரப்பினரை பெயரிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாமதமின்றி மின்சாரப் பட்டியல்கள் தீர்க்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,133,601 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,201,196 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 28,334,797 நிதி விளைவுகளில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மானியம் ரூபா 26,669,338 இனால் அதிகரித்தமை, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக கிடைத்த மூலதன மானியம் ரூபா 7,192,746 இனால் அதிகரித்தமை இந்த நிதி விளைவுகள் தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் மீளாய்வாண்டை ஒப்பிடும் போது அரசாங்கத்தின் மானியம் மற்றும் மூலதன மானியம் முறையே 17 சதவீதத்தாலும், 1439 சதவீதத்தாலும் அதிகரித்திருந்த போதும் ஏனைய வருமானம் 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அவ்வாறு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செலவினங்கள் 406 சதவீதத்தினாலும், ஏனைய செலவினங்கள் 17 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வருமானத்தின் மிகை விகிதம் 3.24 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் நடைமுறை விகிதம் மற்றும் தொழிற்படு விரைவுச் சொத்து விகிதம் முறையே 0.24 சதவீதத்தினாலும், 0.23 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012-2015 காலப்பகுதியில் ரூபா 1,031,020 கிரயத்தினை செய்து பிரதான அலுவலகத்தில் தாபிக்கப்பட்டிருந்த உயிரியல் வாயு அலகு 2016 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டதுடன் அதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 22,500 முற்பணமாக செலுத்தி பலூன் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அலகில் ஏனைய செயற்பாட்டு நிலையில் வழுக்கள் காணப்பட்டமையால் அந்த பலூனை தாபிக்காதிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அலகின் மொத்த செலவினம் ரூபா 1,053,520 ஆக இருந்தது. அது நீண்டகாலமாக பழுதுபார்க்கப்படாதிருந்தமை காரணமாக அதன் துணைப் பாகங்கள் செயலிழந்த நிலைமையில் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 பரிசோதனைகளை நடாத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் குழுவின் அறிக்கையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அங்கத்தவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றமை, அமைச்சின் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமையின் காரணமாக புதிய உத்தியோகத்தர்கள் இதற்காக நியமிப்பதற்கு ஏற்பட்டமையால் பரிசோதனை அறிக்கை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தக் குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் விரைவாக இந்த அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி பரிசோதனைக் குழுவின் அறிக்கையை பெற்று பரிந்துரைகள் அதில் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விவசாய அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான விடுதியில் அறையொன்றை வாடகைக்கு வழங்குவதற்காக 2015 மே முதல் 2018 யூலை மாதம் வரையான காலத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 8,895,470 தொகை பெற்ற நபரிடமிருந்து அல்லது இதற்காக அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு பதிலும் கிடைத்திருக்கவில்லை. அந்தப் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கான ஆவணங்கள், பதிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் போதியளவில் காணப்படவில்லை. | வாடகைக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 89,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கெமரா ஒன்று நிறுவகத்தில் காணப்படாமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இல் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் உரிய குழுவின் அறிக்கை வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 104 பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி குழுவின் அறிக்கையை பெற்று உரிய பரிந்துரைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

**3.3 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இலக்கம் 40-3933 என்ற வாகனத்தின் சட்டரீதியான உரித்து நிறுவனத்திற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | 40-3933 என்ற வாகனம் ஓட்டத்திற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுவதுடன் அந்த வாகனத்தை நிறுவகத்திற்கு கையேற்பதற்காக கணிசமான கிரயமொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமையால் கையேற்பதால் | வாகனத்தின் உரித்தை கையேற்று பழுதுபார்த்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறுவனத்திற்கு நட்டமொன்று ஏற்படும். தற்போது இந்த வாகனம் எந்தவொரு வகையிலும் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்த வாகனம் தொடர்பாக பொதுத் திறைசேரியின் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் செயல் முன்னேற்றம் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SGD) அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்றம் ஆண்டறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்றம் ஆண்டறிக்கையில் தற்போது உள்ளடக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பூரணப்படுத்தப்பட்ட படிவம் இதனுடன் தேவையான நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |